# பன்னிரெண்டாம் வகுப்பு

## வணிகவியல்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்:90

பிரிவு – அ

20x1=20

I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. மேலாண்மை என்பது ______ ன் செயல் ஆகும்.
அ) மேலாளர் ஆ) கீழ்ப்பணியாளர் இ) மேற்பார்வையாளர் ஈ) உயரதிகாரி

2. பின் வருவனவற்றுள் எது முக்கிய பணிகள் அல்ல ?
அ) முடிவெடுத்தல் ஆ) திட்டமிடுதல் இ) ஒழுங்கமைத்தல் ஈ) பணியமர்த்தல்

3. ______ உதவியால் அதிகாரப் பகிர்வு எளிதாக செய்யப்படுகிறது.
அ) முதுகலை வணிக மேலாண்மை ஆ) விதிவிலக்கு மேலாண்மை
இ) குறியிலக்கு மேலாண்மை ஈ) முதுகலை வணிக நிர்வாகம்

4. மூலதனச் சந்தை என்பது ______ க்கான ஒரு சந்தை ஆகும்.
அ) குறுகிய கால நிதி ஆ) நடுத்தர கால நிதி
இ) நீண்ட கால நிதி ஈ) இவற்றில் எதுவும் இல்லை

5. மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர் ______ ஆவார்.
அ) தனி நபர் ஆ) நிறுமங்கள் இ) நிதி நிறுவனங்கள் ஈ) இவை அனைத்தும்

6. பணச் சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு
அ) வணிக வங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி இ) பாரத ஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி

7. நாட்டில் ______ பங்குச் சந்தைகள் உள்ளன.
அ) 21 ஆ) 24 இ) 20 ஈ) 25

8. செபியின் தலைமையகம் ______ ஆகும்.
அ) கல்கத்தா ஆ) மும்பை இ) சென்னை ஈ) டெல்லி

9. நம்பிக்கையுள்ள வணிகர் என்பவர்
அ) காளை ஆ) கரடி இ) மான் ஈ) வாத்து

10. இந்தியாவில் இந்திய பத்திரங்கள் மற்றும் பரிமாற்ற வாரியம் (SEBI) தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு.
அ) 1988 ஆ) 1992 இ) 1995 ஈ) 1998

11. மனித வளம் என்பது ஒரு ______ சொத்து.
அ) கண்ணுக்கு புலனாகும் ஆ) கண்ணுக்குப் புலனாகா
இ) நிலையான ஈ) நடப்பு

12. விளம்பரம் என்பது ஒரு ______ ஆட்சேர்ப்பு வளமாகும்.
அ) அகவளங்கள் ஆ) புற வளங்கள் இ) முகவர் ஈ) புறத்திறனீட்டல்

13. முதலில் வேலை, அடுத்தது மனிதர் என்பது ஒரு ______ கோட்பாடு
அ) சோதனை ஆ) நேர்காணல் இ) பயிற்சி ஈ) பணியமர்த்தல்

14. ______ வேலை அடையாளம் மற்றும் ஈர்ப்பதில் செயல்முறை குறிக்கிறது என்று குறிக்கிறது.
அ) தேர்வு ஆ) பயிற்சி இ) ஆட்சேர்ப்பு ஈ) தூண்டுதல்

15. தொழிற்சாலைக்குள் பயிற்சி எங்கு வழங்கப்படுகிறது ?
அ) வேலையிடத்தில் ஆ) அறையில் இ) பயிற்சி திணைக்களத்தில் ஈ) குழுவினால்

16. உடனடிச் சந்தை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது.
அ) பொருட்கள் ஆ) பரிவர்த்தனை இ) ஒழுங்குமுறை ஈ) காலம்

17. சந்தையில் உயர் நிலையில் இருப்பவர் யார் ?
அ) வாடிக்கையாளர் ஆ) விற்பனையாளர் இ) மொத்த விற்பனையாளர் ஈ) சில்லறை விற்பனையாளர்

18. இணையத்திற்கு நுழைவு வாயில் என்பது
அ) போர்டல் ஆ) சிபியு இ) மோடம் ஈ) வெப்நராங்

19. நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் நடைமுறைக்கு வந்த நாள்
அ) 01.01.1986 ஆ) 01.04.1986 இ) 15.04.1987 ஈ) 15.04.1990

20. ஜான் எப். கென்னடியின் கூற்றுப்படி பின்வருபவற்றில் நுகர்வோர் உரிமையில் இடம் பெறாதவை எது ?
அ) பாதுகாப்பு உரிமை ஆ) தேர்ந்தெடுக்கும் உரிமை இ) நுகரும் உரிமை ஈ) தெரிவிக்கும் உரிமை

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பிரிவு – ஆ

**II எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் (வினா எண் – 30 க்கு கட்டாயம் பதிலளிக்க வேண்டும்)** 7x2=14

21. மேலாண்மை என்றால் என்ன ?
22. கட்டுப்படுத்துதல் என்றால் என்ன ?
23. முக்கிய முடிவுப் பகுதிகள் என்றால் என்ன ?
24. நிதிச் சந்தை – சிறு குறிப்பு வரைக.
25. அரசு பத்திரங்கள் சந்தை என்றால் என்ன ?
26. மனித வள மேலாண்மையின் இயல்புகளில் ஏதேனும் இரண்டு கூறுக.
27. நுண்ணறிவு பரிசோதனை என்றால் என்ன ?
28. தரப்படுத்துதல் என்றால் என்ன ?
29. "வாங்குவோர் ஜாக்கிரதை" என்றால் என்ன ?
30. தெரிவிக்கும் உரிமை (Right to be informed) பற்றி சிறு குறிப்பு வரைக.

## பிரிவு – இ

**III எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் வினா எண் – 40 க்கு கட்டாயம் பதிலளிக்க வேண்டும்** 7x3=21

31. இரண்டாம் நிலைச் சந்தை – சிறு குறிப்பு தருக.
32. குறியிலக்கு மேலாண்மையின் இயல்புகளை எழுதுக.
33. பணச்சந்தையில் ஈடுபடும் பங்கேற்பாளர்கள் யாவர் ?
34. மான் மற்றும் முடிவாத்து – விளக்குக.
35. மனித வளத்தின் முக்கியத்துவம் என்ன ? (3 மட்டும்)
36. கட்டமைக்கப்பட்ட நேர்காணல் என்றால் என்ன ?
37. தொழிற்சாலைக்குள் பயிற்சி என்றால் என்ன ?
38. சந்தையிடுதலின் நோக்கங்கள் யாவை ?
39. செயற்கை பற்றாக்குறை என்றால் என்ன ?
40. புறத்தோற்றமற்ற பத்திரங்கள் என்றால் என்ன ?

## பிரிவு – ஈ

**IV அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 7x5=35

41. அ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி (5 மட்டும்) (அல்லது)
    ஆ) நுகர்வோரின் கடமைகளை விளக்குக.
42. அ) குறியிலக்கு மேலாண்மையின் முக்கிய நன்மைகள் யாவை ? (5 மட்டும்) (அல்லது)
    ஆ) பொருளாதார அடிப்படையில் சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது ?
43. அ) முதல்நிலைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலை சந்தை இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகளை விவரி. (5 மட்டும்) (அல்லது)
    ஆ) பணச்சந்தை மற்றும் மூலதனச்சந்தை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி. (5 மட்டும்)
44. அ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள அகவளங்களை விளக்கு. (5 மட்டும்) (அல்லது)
    ஆ) ஆட்சேர்ப்பு முறைக்கும் தேர்ந்தெடுத்தல் முறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை விவரி. (ஏதேனும் 5)
45. அ) ஏதேனும் ஐந்து பங்குச்சந்தையின் பணிகளை விவரி. (அல்லது)
    ஆ) செபியின் அதிகாரங்களை விவரி.
46. அ) மனிதவள மேலாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக. (அல்லது)
    ஆ) நவீனச் சந்தையிடுதல் ஏதேனும் இரண்டினை விளக்குக.
47. அ) சந்தையிடுகை கலவையின் கூறுகளை குறிப்பிடுக. (அல்லது)
    ஆ) நுகர்வோர் எவ்வாறு கரண்டப்படுகிறார்கள் ?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com